[2010 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

96—

குடமுழுக்கு

***31465—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆவூரில் ஈஸ்வரன், பெருமாள் கோயில்களைப் புதுப்பித்து குடமுழுக்கு செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம் ஆவூர் கிராமம் அருள்மிகு குகை வரதராஜப்பெருமாள் மற்றும் அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில்களில் துறையின் பல்வேறு நிதியாதாரங்களைக் கொண்டு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவூரிலே உள்ள இந்தக் கோயில்கள் 10-வது நூற்றாண்டைச் சேர்ந்த மிகப் பழைமைவாய்ந்த கோயில்கள். இந்தக் கோயில்களுக்கு 30 இலட்சம் ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாமி சன்னதி, அம்மன் சன்னதி எல்லாம் முற்றிலும் பழுதடைந்து இருக்கிற காரணத்தால் இரண்டு கோயில்களிலும் திருப்பணி, குடமுழுக்கு செய்யக்கூடிய வகையிலே அதிக அளவு நிதி ஒதுக்க, உடனடியாக அதைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 26]

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திருப்பணி செய்வதற்கான முயற்சிகள் கடந்த 2008 ஆம் ஆண்டே மேற்கொள்ளப்பட்டு, 38,50,000 ரூபாய்க்கு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது. ஆனால், துறையினுடைய தலைமை ஸ்தபதி, திரு. முத்தையா அவர்கள், அந்தத் திருக்கோயிலைச் சென்று பார்வையிட்ட நேரத்தில் 38,50,000 ரூபாய்க்கு திருப்பணிகள் செய்தாலும் இது முழுமைபெறாத பணியாக இருக்கின்றது; ஆகவே, இன்னும் கூடுதலாக அதிலே திருப்பணிகள் செய்ய வேண்டுமென்று துறைக்கு அறிவுறுத்தியிருக்கிறார். ஆகவே, அந்த வகையிலே திருத்திய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விருப்பப்படி அனைத்துப் பணிகளும் முடித்துக் குடமுழுக்கு நடத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்த ஸ்தபதிகளுடைய எண்ணிக்கை குறைவாக இருப்பதால், உடனடியாக Estimates போடுவதிலே தாமதம் ஏற்படுகிறது என்பதை அறிகிறோம். மேலும், இந்த இரண்டும் மிகவும் பழமைவாய்ந்த கோயில்களாக இருக்கின்ற காரணத்தால், இந்த 13-வது நிதிக் குழுவிலேயே நிதியை ஒதுக்கி, விரைந்து அதற்குக் குடமுழுக்கு செய்வதற்கு ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: எந்த நிதியை, எந்தத் திருப்பணிக்கு மற்றும் எந்தத் திருக்கோயில்களுக்குப் பயன்படுத்துவதென்று மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. மு. அப்பாவு.

[2010 ஏப்ரல் 26

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம், வரகுணபாண்டீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான இடங்கள் மிக அதிகமாக இருக்கின்றன. நம்முடைய இந்து அறநிலையத் துறையின்மூலம் பல இடங்களில் கல்லூரிகள் தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று, பிற்படுத்தப்பட்ட ராதாபுரம் பகுதியில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் அறநிலையத் துறையே ஒரு I.T.I. தொடங்குவதற்கு முன்வர வேண்டும். அருகிலே கூடங்குளம் அணுமின் திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்து அடிப்படை வசதிகள் மற்றும் கட்டடங்களை இலவசமாகக் கட்டித் தருவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். உங்களிடம் நிலமும் இருக்கின்றது. இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர், ராதாபுரம் பேருந்து நிலையம் திறக்க வந்தபோது அந்தத் தொகுதி மக்கள், அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையாக இதை வைத்தார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் அந்தப் பேருந்து நிலையத்தை திறக்கும்பொழுது பொதுமக்கள் வைத்த கோரிக்கையை இந்து அறநிலையத் துறை அமைச்சர் ஏற்று அறநிலையத் துறை நிலத்தில், புதிய I.T.I. நிறுவனம் ஒன்றை நீங்கள் ஆரம்பித்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி அதுதானே? மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, உட்காருங்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்த அந்த மனு எனக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக கல்லூரிகள், பள்ளிகள் போன்றவற்றை ஆரம்பிப்பதற்கு என்று நிருவாகம் செய்வதற்கென்று பள்ளிக் கல்வித் துறையும், உயர் கல்வித் துறையும் சிறப்பாகச் செயல்பட்டு கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் அறநிலையத் துறையின் சார்பில் ஏற்கெனவே நடைபெறுகின்ற கல்லூரிகள், பள்ளிகள் தவிர புதிதாகத் துவக்கலாமா என்று ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறோம். ஆய்வின் முடிவில் விவரம் தெரியவரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி.

2010 ஏப்ரல் 26]

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான பல கோயில்கள் குடமுழுக்கு செய்து, 12 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட கோயில்களை இந்த அரசு சிறப்புக் கவனம் செலுத்தி, குடமுழுக்கு செய்வதற்கு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய அறிவுரையின்படி சிறப்புக் கவனம் இந்த அரசு செலுத்துகின்ற காரணத்தாலேதான் 4 ஆண்டுக் காலத்தில், இதுவரை கடந்த எந்த ஆட்சிக் காலத்திலும் நடந்திராத அளவுக்கு முழு வீச்சில் திருப்பணிகளும், குடமுழுக்குகளும் நடந்து, 4000-க்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் இந்தக் குறுகிய 4 ஆண்டுக் காலத்திலே சீர் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும், அந்தத் திருப்பணிகளைச் செய்வதற்கு பல்வேறு நிதியாதாரங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்பதையும் நான் அறிவித்திருக்கிறேன். ஆகவே, அந்த வகையிலே, திருப்பணிகளை இன்னும் விரைந்து செயல்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

97—

தரம் உயர்த்துதல்

***104208—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் நகராட்சி, கருத்தப்புளியம்பட்டி அரசுத் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?